# சுயமரியாதை இயக்கம் முன்வைத்த சுயமரியாதைத் திருமணங்கள்

**முனைவர். ச. ஜீவானந்தம்**
(ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புது டில்லி)

**கட்டுரைச் சுருக்கம்:**



*ஓர் ஆணும், ஒரு பெண்ணும் விருப்பப்பட்டு, இருவரும் இன்றிலிருந்து நண்பர்களாகி விட்டோம் என்று சொல்லி, அதற்கான ஓர் ஒப்பந்தத்தினை நிறைவேற்றிக் கொண்டு, முடிந்தால் அதை மற்றவர்களுக்கும் அறிவிக்கச் செய்தலே சுயமரியாதைத் திருமண முறையாகும்.*

*பாரம்பரியத் திருமணம் என்ற நிறுவனமானது பெண்ணடிமைத்தனத்தின் தோற்றுவாய் என்ற மார்ச்சிய வாதத்தினையே சுயமரியாதை இயக்கத்தினரும் ஏற்றிருந்தனர். அதே வேளையில், இந்தியச் சமூகக் கட்டமைப்பினில் உள்ள ஜாதி, சடங்கியல், சமூக ஆதிக்கம், பார்ப்பனியம் முதலான உள்முரண்களை நன்கறிந்த சுயமரியாதை இயக்கத்தினர், பார்ப்பனியக் கருத்தியல்கள் எவ்வாறு இந்தியத் திருமணங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதனைத் தோலுரித்துக் காட்டினர்.*

*திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் என்றும், அந்த ஒப்பந்தம் பெண்ணையும் ஆணையும் மட்டும் சார்ந்ததே ஒழிய, வேறு எவ்விதத் தெய்வீகத் தன்மைக்கும் சம்பந்தப்பட்டது அல்ல என்ற சுயமரியாதைத் திருமணக் கோட்பாட்டை இக்கட்டுரை ஆய்கிறது. ஒருவரின் பணத்தகுதியினை மீறிக் கடன்களைப் பெற்று, ஜாதியப் படிநிலையைப் பாதுகாக்கும் சடங்குகளைச் செய்து பாரம்பரியத் திருமணமாக நடத்தாது, அவரவர் பொருளாதாரத்துக்கு உகந்த முறையில் சுயமரியாதைத் திருமணமாக நிகழ்த்தப்பட்ட கூறுகளையும் இக்கட்டுரை ஆய்கிறது.*

**முகவுரை:**

சமூகத்தில் நிகழும் மாற்றங்கள் எல்லாம், தனி நபர்களின் அறிவு மற்றும் வசதி வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க வேண்டும் (ஆனைமுத்து, 2009, பக்கம். 354) என்ற பெரியார், திருமண முறைகளில் அடிப்படையான மாற்றங்கள் வேண்டும் என்று உணர்ந்து அத்தகைய மாற்றங்களுக்கான முன்னெடுப்புகளைச் சமூகத்தில் ஆக்கபூர்வமாகச் செய்து வரலானார்.

இந்தியத் திருமண முறைகள் பொதுவாகவே அறிவு மற்றும் வசதி ஆகியவைகளை மட்டும் சார்ந்ததாக இல்லாமல், சமுதாய அமைப்பு, அரசியல், சட்டம், பொருளாதார மற்றும் சொத்து உரிமை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கின்றன. இவைகளை

உணர்ந்திருந்த சுயமரியாதைக்காரர்கள் அத்தகைய நடவடிக்கைகளில் உரிய மாறுதலைக் கொண்டுவர வேண்டும் என்று விரும்பி, அதற்கான முன்னெடுப்புகளைச் செய்தனர் (ஆனைமுத்து, 2009, பக்கம். 354).

திருமண முறைகளில் செய்யக்கூடிய மாறுதல்கள் எல்லாம் அவரவர் பகுத்தறிவினையும் அனுபவ அறிவினையும் அனுசரித்துப் பார்த்தே நடக்க வேண்டும் என்கிற அடிப்படைகளிலே தான், சுயமரியாதைத் திருமணங்கள் என்பவைகள் சமுதாயத்தில் முன்னெடுக்கப்பட்டனவே தவிர, வெறும் மாறுதல் என்பதற்காகவோ (பகுத்தறிவு 1934, அக்டோபர் 07), அல்லது நாத்திகக் கொள்கை என்பதற்காகவோ இல்லை என்ற பெரியார், நாத்திகம் என்பதனை அவரவர்களின் மன உணர்ச்சி, ஆராய்ச்சித் திறன் ஆகியவைகளைச் சார்ந்ததே தவிர, அது ஒரு குறிப்பிட்ட குணமோ, கட்சியோ, மதமோ அல்ல என்றார் (ஆனைமுத்து, 2009, பக்கம். 367). எனவே திருமண முறைகளில் ஏற்படும் மாற்றங்களை வெறும் ஆத்திகம், நாத்திகம் என்ற வாதங்களின்அடிப்படையாகக்கொண்டு சுயமரியாதைக்காரர்கள் அணுகவில்லை என்பது இதன் மூலம் புலனாகிறது.

அறிவு, அனுபவம், ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலான திருமண முறைகளுக்கே சமூகத்தில் இடம் இருக்க வேண்டும், அத்தகைய அறிவினைச் சார்ந்த திருமண முறைகள் என்பது வாழ்நாள் முழுமைக்கும் பொருந்தும்படியாகவும், மனித வாழ்வையும், பிறவிக் குணங்களையும் மேன்மைப்படுத்துவதாகவுமே இருக்க வேண்டும் என்று சுயமரியாதை இயக்கத்தினர் விரும்பினர். (ஆனைமுத்து, 2009, பக்கம். 348-359).

மேலும், ‘தெய்வீகம்’, ‘பழக்கம்’, ‘வழக்கம்’, ‘சாத்திரம்’, என்கின்ற வார்த்தைகள் எல்லாம் முன்னேற்றத்துக்கும், பகுத்தறிவுக்கும், சுதந்திரத்திற்கும் பிரதான எதிர்வாதங்களாக இருக்கின்ற பொழுது, சுயமரியாதைத் திருமணம் என்பதில் மேற்படி முன்னேற்றத்திற்கும் சுதந்திரத்திற்கும் எதிரான எந்தவொரு வாதங்களையும் சுயமரியாதைக்காரர்கள் அவற்றினுள் அனுமதிக்கவில்லை. (பகுத்தறிவு 1934, அக்டோபர் 07).

சுயமரியாதைத் திருமணத்தில் எல்லோருக்கும் வசதியான நேரத்தினைப் பார்த்து, மிகச் சுருக்கமான செலவினைச் செய்து, அனாவசியமான அதே சமயம் அர்த்தமற்ற சடங்குகளையெல்லாம் தவிர்த்து (பகுத்தறிவு 1934, அக்டோபர் 07), மணமக்கள் தங்கள் ஒப்பந்தங்களை ஒருவருக்கொருவர் சொல்லி மண சம்பந்தத்திற்கு அறிகுறியாக மாலையிட்டுக் கொள்ளுவது என்பதுடன் சுயமரியாதைத் திருமணம் என்பது முடிவு பெற்றுவிடுகிறது. (புரட்சி 1934, ஜூன் 17 மற்றும் ஆனைமுத்து, 2009, பக்கம். 358).

திராவிடர் திருமண முறைகளில் கூடச் சடங்குமுறை சார்ந்த திருமணங்கள் என்பவைகள் நடைபெற்றதற்கான ஆதாரங்களினை எந்தவொரு பண்டைய திராவிட நூல்களிலும் இருந்தும் பெற முடிவதில்லை என்ற வரலாற்றுப் புரிதலுடனேயே சுயமரியாதைத் திருமணங்களை முன்னெடுத்தார் பெரியார். (விடுதலை 1948, அக்டோபர் 24 மற்றும் ஆனைமுத்து, 2009, பக்கம். 354).

சுயமரியாதைத் திருமணங்களின் மூலம், பார்ப்பனியம் சமூகத்தில் கட்டிவைத்திருந்த ஒவ்வொரு கட்டினையும் சுயமரியாதைக்காரர்கள் உடைத்தனர். குறிப்பாக இராகுகாலம், ஜாதகம், முகூர்த்தம் என்பவை எல்லாம் பெருத்த தொல்லை என்று கருதி, சுயமரியாதைத் திருமணங்களின் மூலம் அவை ஒவ்வொன்றினையும் அறிவுப்பூர்வமாகத் தகர்த்தனர். (ஆனைமுத்து,

2009, பக்கம். 358). ஒழுக்க விதிகளின் அடிப்படையிலும், மனித சமுதாயத்தை உயர்நிலைக்கு மேம்படுத்தும் உந்துதலுடனும், மூடநம்பிக்கைக்கு ஆதாரமானதும், பார்ப்பனியத்திற்கு அடிபணியச் செய்வதுமான எல்லா விதச் சடங்குகளையும் தவிர்த்து (விடுதலை 1948, அக்டோபர் 24), மூடப்பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் பார்ப்பனியச் சடங்குகளையோ, காலவிரயங்களையோ தவிர்த்து, (குடி அரசு 1930, அக்டோபர் 12 மற்றும் ஆனைமுத்து, 2009, பக்கம். 355), ஜாதியக் கலப்பு மற்றும் எளிமை அடிப்படையிலான திருமணங்களையே சுயமரியாதைக்காரர்கள் முன்னெடுத்தனர். (குடி அரசு 1930, செப்டம்பர் 21). மேலும், ‘கன்னிகாதானம்’, ‘கல்யாணம்’, ‘தாரா முகூர்த்தம்’ என்கின்ற வார்த்தைகள் அனைத்தும் மறைந்து, அகராதியில் கூட இல்லாமல் ஒழிய வேண்டும் என்பதே பெரியார் அவர்களின் ஆவலாக இருந்தது. (விடுதலை 1951, பிப்ரவரி 17).

## சுயமரியாதைத் திருமணமும் ஜாதியமும்:

பெண்களின் சுயதேர்வுகளுக்கு மதிப்பு தரும் வகையிலும், ஜாதியக் கட்டுமானமானது பெண்ணுடல் சார்ந்தே கட்டமைக்கப்படுகின்றது என்ற சமூக அறிவியலின் அடிப்படையிலும், சுயமரியாதைக்காரர்கள் காதல் திருமணம், தேர்வுத் திருமணங்கள் (choice marriages) மற்றும் ஜாதியக் கலப்புத் திருமணங்களை ஊக்குவித்தனர். (குடி அரசு 1929, டிசம்பர் 01). இத்திருமணங்கள் மூலம் ஜாதியத்தை, சமூகத்தில் இருந்து ஒழித்துவிட முடியும் என்ற சமூக அறிவியல் புரிதலின்பால் சுயமரியாதைக்காரர்கள் நின்றனர் என்று, பகுத்தறிவுவாதியான இராகவன் தனது “ஜீவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?” என்ற கட்டுரையில் குறிப்பிடுகின்றார். (குடி அரசு 1931, நவம்பர் 08). ஜாதி வேற்றுமையை விலக்க வேண்டுமானால், ஒரு பெண்ணுக்கு ஏற்ற இளைஞன் எந்த மரபிற் பிறந்தவனாயிருந்தாலும், அவன் அவளை விரும்புவானாயின் அவனுக்கே அவளை வாழ்க்கைப்படுத்துதல் வேண்டும் என்று ஆண்டாள் அம்மையார் குறிப்பிடுகின்றார். (குடி அரசு 1932, மே 22 மற்றும் ஜூன் 05). சுயமரியாதைத் திருமணத்தில் ஜாதி, வகுப்பு, குலம், கோத்திரம் என்பவைகள் கவனிக்கப்படாமல் மணமக்களுடைய தகுதிகளே பிரதானமாக கவனித்துப் பார்க்கப்பட்டது / பார்க்கப்படுகின்றது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும் (பகுத்தறிவு 1934, அக்டோபர் 07).

அதுமட்டுமல்லாமல், இந்திய மரபில் ஒருவரின் மதம் மற்றும் ஜாதிய உட்பிரிவுகளைப் பிரதானமாகக் காட்டிக் கொள்வதற்காகத் தான் திருமணத்துக்குள் சடங்குமுறைகள் புகுத்தப்பட்டுள்ளன. சடங்குகள் உண்டாக்கிய நோக்கங்கள் என்பவை எல்லாம் ஜாதியை நிலைநாட்டவே. சடங்குகளைச் செய்ய வேண்டியதன் அவசியமும், அதனால் ஏற்படப் போகிற பயனும், அதன் அவசியமும் என்னவென்பதைப் பற்றி யாரைக் கேட்டாலும் விடை கிடைக்காது. ‘இது அவரவர்களின் ஜாதிய வழக்கம்’ என்று தான் கூறி வருவார்கள். ஒவ்வொருவரின் ஜாதியினைப் பாதுகாக்கவே ஒவ்வொரு விதமான சடங்குகளையும் உருவாக்கி, நிரந்தரமாக மக்களைப் பிரித்து வைக்கவே இந்தச் சடங்குமுறைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன என்ற பெரியார் (ஆனைமுத்து, 2009, பக்கம். 357-358), இத்தகைய மடமை மூடப்பழக்கங்கள் ஒழிந்து, சீர்திருத்த முறையில் திருமணம் செய்துகொள்ள ஏராளமான இளைஞர்கள் முன்வரவேண்டும் என்றார் (விடுதலை 1951, பிப்ரவரி 17).

## படிநிலையற்ற உறவுமுறை:

சுயமரியாதைத் திருமணம் என்பதன் முக்கியத் தத்துவம் என்பது கூட்டு வாழ்க்கையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்தவித வித்தியாசமோ, உயர்வுதாழ்வோ இல்லை என்பதும், சகல துறைகளிலும் சம சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்பதுமேயாகும் என்றார் பெரியார். (பகுத்தறிவு 1934, அக்டோபர் 07). சுயமரியாதைத் திருமணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமஉரிமை இருக்கின்றது. ஆனால், ஆரியரின்/ பார்ப்பனியத்தின் எட்டுவகைத் திருமண முறைகளில் ஒன்றில் கூடப் பெண், ஓர் உயிருள்ள பொருளாகக் கூட மதிக்கப்பட்டதே இல்லை என்பதனை அறிய முடிகிறது என்று குறிப்பிட்டார் பெரியார். (ஆனைமுத்து, 2009, பக்கம். 376).

திருமணம் என்பதைச் சடங்குகள் என்று எண்ணாமல், வாழ்க்கை ஒப்பந்தமாகவே சுயமரியாதைக்காரர்கள் கருதினர். (மேற்குறிப்பிட்ட நூல்). வாழ்க்கைச் சுதந்திரத்தில் மணமக்கள் இருவருக்கும் சம சுதந்திரம் என்பது வேண்டும். அதுவே சுயமரியாதை இயக்கத்தின் முதல் இலட்சியமாகவும் இருந்து வந்துள்ளது. (ஆனைமுத்து, 2009, பக்கம். 368). திருமணம் என்றால் சுதந்திர வாழ்க்கையாகவும், சமத்துவ வாழ்க்கையாகவுமே இருக்க வேண்டுமே ஒழிய, அடிமை வாழ்க்கையாகவும், உயர்வு-தாழ்விற்கான வாழ்க்கையாகவும் இருக்கக் கூடாது என்பதே பெரியார் அவர்களின் தீர்க்கமான எண்ணமாக இருந்தது. (குடி அரசு 1935, ஜூன் 16).

வாழ்க்கை நடத்துவது என்பது வியாபாரம் நடத்துவது போன்ற ஒரு செயல் தான் என்ற பெரியார், வியாபாரத்திற்கு முதலும் உழைப்பும் எப்படித் தேவையாய் இருக்கின்றதோ, அதுபோன்று வாழ்க்கைக்கு ஓர்ஆணும் பெண்ணும் அவர்களது இரண்டறக் கலந்த ஒப்புரவும் தேவையாய் இருக்கிறது என்றார். (ஆனைமுத்து, 2009, பக்கம். 345).

## பொருளாதாரத்தில் எளியவர்க்கும் ஏற்ற திருமண முறைகள்:

அதுமட்டுமல்லாமல், பாரம்பரியத் திருமண முறைகளில் ஏற்படும் திருமணம் சம்பந்தமான செலவு, மெனக்கெடல் மற்றும் இன்னும் பிற தேவையற்ற கஷ்டநஷ்டங்கள் முதலியவற்றினைப் பற்றி யாரும் இலட்சியம் செய்வதே இல்லை. அத்திருமணங்கள் பெரும்பாலும், ஆடம்பரத்தினை மையமாகக் கொண்டு, வீண் செலவினங்களுக்காக, ஒருவரின் பணத்தகுதியினை மீறிக் கடன்களைப்பெற்றாவது செய்யப்படுகின்றன. (புரட்சி 1934, ஜூன் 17). இத்தகைய திருமணக் கடன்களால், மணமக்களின் பெற்றோர்கள் வெகுநாளைக்கு அவதியுற வேண்டி இருப்பதுடன், சில குடும்பங்களெல்லாம் இத்தகைய திருமணச் செலவுகளாலேயே ஏழ்மை நிலைக்குத் தள்ளவும் படுகின்றனர் (மேற்குறிப்பிட்ட நூல்). இப்படிப்பட்ட கொடுமைகளற்ற, முட்டாள்தனமற்ற அம்சங்களைக் கொண்டதாகவே சுயமரியாதைத் திருமணங்கள் இருந்து வருகின்றன (மேற்குறிப்பிட்ட நூல்).

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், சுயமரியாதைத் திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் என்றும், அந்த ஒப்பந்தம் பெண்ணையும் ஆணையும் மட்டும் சார்ந்ததே ஒழிய, வேறு எவ்விதத் தெய்வீகத்தன்மைகளுக்கோஅல்லது எவ்விதக் கட்டுப்பாட்டிற்கோ சம்பந்தப்பட்டது இல்லையென்பதுமே ஆகும். (புரட்சி 1934, ஜூன் 17).

## திருமணத்தில் மணமக்களின் சம்மதம் இன்றியமையாததாகும்:

திருமணம் செய்து கொள்வதில், தாய் தந்தையரைக் காட்டிலும், மணமக்களுக்கே அதிக உரிமை உண்டு என்று ஆண்டாள்

அம்மையாரும் குறிப்பிடுகின்றார். (குடி அரசு 1932, மே 22 மற்றும் ஜூன் 05). பொதுவாகவே, சுயமரியாதைத் திருமணம் என்பதில் மணமக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து, தங்களுக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும், அர்த்தமும் பொருத்தமும் அவசியமும் இல்லாமல் வெறும் சடங்கு, பழக்கவழக்கம் என்பதற்காக மட்டும் ஒன்றையும் செய்து விடக்கூடாது என்பதுமே ஆகும். (புரட்சி 1934, ஜூன் 17).

ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அன்பு கொண்ட பின்னரே திருமணத்தினைச் செய்துகொள்ள வேண்டும் என்ற பெரியார் (மேற்குறிப்பிட்ட நூல்), இயற்கை உணர்வுகளுக்காகவும், மன நிறைவுகளுக்காகவுமே ஒருவருக்கு வாழ்க்கைத்துணை என்பவர் இருக்கவேண்டுமே தவிர, (விடுதலை 1951, பிப்ரவரி 17), திருமணம் ஆகிவிட்டதே என்கின்ற காரணத்திற்காக ஒருவர் கொடியவராக இருந்தாலும் அவருடன் அன்பு கொண்டு தான் வாழவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதைக் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றார். (புரட்சி 1934, ஜூன் 17). மேலும், மணமக்கள் என்பவர்கள் நண்பர்கள் போலவும், ஒருவர் இடத்திலே ஒருவர் காதல் உடையவர்களாகவும் இருக்க வேண்டுமே தவிர, எந்தவொரு ஆணும், பெண்ணும் எந்தவொரு நிர்ப்பந்தத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் அடங்கி நடக்க வேண்டும் என்பது அவசியமில்லை என்று குறிப்பிடுகின்றார் பெரியார். (விடுதலை 1951, பிப்ரவரி 17).

ஓர் ஆணும், ஒரு பெண்ணும் விருப்பப்பட்டு, இருவரும் இன்றிலிருந்து நண்பர்களாகி விட்டோம் என்று சொல்லி, அதற்கான ஓர் ஒப்பந்தத்தினை நிறைவேற்றிக் கொண்டு, அதை மற்றவர்களுக்கு அறிவிக்கச் செய்தாலே போதுமானதாகும். (ஆனைமுத்து, 2009, பக்கம். 345).

அதே போல், பெற்றோர்களும் தங்களது குழந்தைகளுக்குத் தன்னிச்சையாகத் ‘திருமணம்’ என்பதனை ஏற்பாடு செய்யாமல், தங்களின் பெண்களுக்குத் தகுந்த வயதும் தொழிலும் ஏற்பட்ட பிறகு, ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடிய வகையினில், பெற்றோர்கள் அவர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்பதே பெரியார் அவர்களின் வாதமாகும்.

## திருமணத்தினைப் பதிவு செய்தல் அவசியம்:

சுயமரியாதைத் திருமணம் செய்து கொள்கிறவர்கள் கட்டாயம் தங்களது திருமணத்தினை அரசாங்கத்தில் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார். (விடுதலை 1946, செப்டம்பர் 04). அப்படிப் பதிவு செய்துகொள்ள ஆரம்பித்து விட்டால், நாள்பட மற்ற சடங்குகள் எல்லாம் தானாக மறைந்துவிடும் என்று சுயமரியாதைக்காரர்கள் நம்பினர். (புரட்சி 1934, ஜூன் 17).

திருமணத்தினைப் பதிவு செய்து கொள்வதன் மூலம், கணவனுக்குச் சரிசமமான தகுதி என்பது மனைவிக்கும் கிடைக்கப் பெறுகின்றது என்ற பெரியார், இருவரும் சமம் என்று சொல்லியே திருமணப் பதிவேட்டில் இருவரும் கையொப்பம் இடுகின்றனர் என்றதுடன், அரசாணிக்கால் வைத்து, நெருப்பினைச் சுற்றி, அம்மியினை மிதித்துச் செய்யப்படும் திருமணங்களில் உள்ள அடிமைத்தனம் என்பதும் இதில் இல்லை என்றார். (விடுதலை 1948, அக்டோபர் 24). அதே போல், இந்த வகையான திருமணம் நடந்த அன்றே, கணவனுடைய சொத்திற்குப் பெண்ணானவள் சமஉரிமை பெற்றவர் ஆகிறார். ஆனால், பழைமை முறைத் திருமணங்களில் பெண்களுக்குச் சொத்துரிமை

என்பது மறுக்கப்படுவதுடன், வாழ்க்கையில் சரிபங்கு உரிமையினையும் இழக்கின்றனர். சுயமரியாதைத் திருமணத்தில் சொத்திலும், வாழ்க்கை உரிமையிலும் பெண்ணுக்கு ஆணினைப் போலவே சரிபங்கு உரிமை இருக்கிறது என்றனர் சுயமரியாதைக்காரர்கள். (புரட்சி 1934, ஜூன் 17).

## மக்களிடம் செல்வாக்கு செலுத்திய சுயமரியாதைத் திருமணங்கள்:

இது போன்ற அறிவுசார் சுயமரியாதைத் திருமணங்களைப் பொதுமக்கள் மத்தியில் சுயமரியாதை இயக்க இதழ்களானது தொடர்ந்து உற்சாகப்படுத்தியும், ஊக்கப்படுத்தியும் வந்ததனைச் சுயமரியாதை இயக்க இதழ்களைக் காணும் பொழுது அறியமுடிகின்றது. (குடி அரசு 1930, ஜூன் 29). வருடம் தோறும் சராசரியாக 2500 முதல் 3000 வரையிலான சுயமரியாதைத் திருமணங்கள் தமிழகத்தில் நடைபெற்றன என்பதனைக் குஞ்சிதம் அம்மையார் குடி அரசு இதழில் பதிவு செய்துள்ளார். (குடி அரசு 1932, ஜூன் 26).

சேலம் மாவட்டம் தாதம்பட்டி கிராமத்தினைச் சார்ந்த பலிஜவார் நாயுடு ஜாதியைச் சார்ந்த ஒருவருக்கு 1926ஆம் ஆண்டும் (குடி அரசு 1926, நவம்பர் 21), முதலியார் ஜாதியைச் சார்ந்த குருசாமி அவர்களுக்கும், இசை வெள்ளாளர் ஜாதியைச் சார்ந்த குஞ்சிதம் அம்மையார் அவர்களுக்கும் 1929ஆம் ஆண்டும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது என்பதனைக் குடி அரசு இதழின் வழி அறிய முடிகிறது.

அதே போல், சிவகாமி-சிதம்பரனார், நீலாவதி-இராமசுப்பிரமணியம், இரங்கம்மாள் - சிதம்பரம், மரகதவல்லி - முருகப்பா, அன்னபூரணி இரத்தினசபாபதி, மஞ்சுளாபாய் - சண்முகம், விசாலாட்சி - இராமசுப்பய்யா ஆகியோரின் திருமணங்கள், குறிப்பிடத்தக்க சுயமரியாதைத் திருமணங்களாக இன்றும் போற்றப்படுகின்றன.

## முடிவுரை:

மானிட சமூகத்தின் விடுதலைக்காக, பிற்போக்குத் தனங்களைப் பகுத்தறிவின் அடிப்படையிலான வாதத்தினை மட்டுமே முன்வைத்துக் கேள்வி எழுப்பிய சுயமரியாதை இயக்கத்தினர், திருமணம் என்ற நிறுவனத்தின் மீது ஆக்கப்பூர்வமான பார்வையினைக் கொண்டிருந்தனர்.

திருமணம் என்ற நிறுவனமானது பெண்ணடிமைத்தனத்தின் தோற்றுவாய் என்ற மார்ச்சிய வாதத்தினையே சுயமரியாதை இயக்கத்தினரும் ஏற்றிருந்தனர். அதே வேளையில், இந்தியச் சமூகக் கட்டமைப்பினில் உள்ள உள்முரண்களை நன்கறிந்த சுயமரியாதை இயக்கத்தினர், பார்ப்பனியக் கருத்தியல்கள் எவ்வாறு இந்தியத் திருமணங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதனைத் தோலுரித்துக் காட்டினர்.

சடங்கியல் நிகழ்வுகள், ஆணாதிக்கச் சிந்தனை மரபுகளை நிலைநிறுத்துவதால், ஆண்-பெண் சமம் என்ற பொருள்படும்படிச் சடங்குகள் தவிர்த்த சுயமரியாதைத் திருமணத்தினைச் சமூகத்தினில் முன்னெடுத்தனர். அதே வேளையில், கைம்பெண் திருமணத்தினையும், ஜாதியக் கலப்பு மணத்தினையும் தொடர்ந்து ஊக்குவித்தனர் என்பதனை இங்கே குறிப்பிட கடமைப்பட்டுள்ளோம்.

## குறிப்புதவி நூல்கள்:

### நூல்கள்:

1. அசல் மனுதரும சாஸ்திரம். சென்னை: திராவிடர் கழகம், 2011.

2. ஆனைமுத்து, வே. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1-6. சென்னை: பெரியார் ஈ.வெ. இராமசாமி- நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை, 2009.

3. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2004.

4. தந்தை பெரியார், அழியட்டும் 'ஆண்மை'. சென்னை: பெரியார் திராவிடர் கழகம், 2010.

5. முத்துமோகன், ந. இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2016.

6. ராஜதுரை, எஸ்.வி. மற்றும் வ. கீதா. பெரியார்: சுயமரியாதை சமதர்மம். கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம், 1999.

7. வளர்மதி, மு. தொகுப்பு. சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்-II. சென்னை: கருப்பு பிரதிகள், 2017.

8. வீரமணி, கி. தொகுப்பு. பெரியார் களஞ்சியம். சென்னை: பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, 2010.

**இதழ்கள்:**

1. உண்மை
2. குடி அரசு
3. திராவிடன்
4. பகுத்தறிவு
5. புரட்சி
6. விடுதலை
7. Revolt

**ஆசிரியர் குறிப்பு:**

முனைவர் ஜீவானந்தம், புது டில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், சமூக அறிவியல் புலம் - பெண்ணிய ஆய்வு மய்யத்தில், உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர். இதற்கு முன்பு, சிக்கிம் ஒன்றியப் பல்கலைக்கழகத்திலும், அஸ்ஸாம் ஒன்றியப் பல்கலைக்கழகத்திலும், வரலாற்றுத் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் வாய்ந்தவர் ஆவார். உள்நாடு மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கு கொண்டுள்ளதுடன், அக்கருத்தரங்குகளில் அளித்த ஆய்வுக் கட்டுரைகளுக்குச் சிறப்பு விருதுகளைப் பெற்றவர் ஆவார்.

அத்துடன், கல்வியில் சிறந்து விளங்கியதற்காக நீதியரசர் இராசகோபாலன் நினைவுப் பதக்கமும், பல்கலைக்கழக வேந்தர் அவர்களின் நூற்றாண்டுப் பரிசும், அனந்தராம சர்மா நினைவுப் பரிசும் பெற்றவர் ஆவார். மேலும், தமிழகம், பெண்ணியம், பெரியாரியம், சமயம், தேவதாசி முறை குறித்து வரலாற்று முறையிலான ஆய்வினை மேற்கொண்டு வருவதுடன், அவற்றினை உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்கள் மற்றும் பதிப்பகங்களின் மூலம் கட்டுரைகளாகவும், புத்தகங்களாகவும் தொடர்ந்து எழுதியும், பதிப்பித்தும் வருகின்றார்.